# 200 தமிழ் கைதிகள் சாகும்வரை உண்ணுவிரதம்

(கொழும்பு)

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்ட 200 தமிழ் கைதிகள் சாகும் வரை உண்ணுவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள். விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தார்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 6 இதழ்: 253
யாழ்ப்பாணம் புதன்கிழமை 23-10-1991

## யாழ்ப்பாணம் - கொழும்பு போக்குவரத்து பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

பூநகரி, சங்குப்பிட்டி பகுதிகளில் இராணுவம் தற்போது நிலைகொண்டுள்ளதால் யாழ்ப்பாணம் - கொழும்பு போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் வாகன அணி மீது மட்டுநகரில் அதிரடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு முஸ்லிம் கொலனிப்பகுதியில் ரோந்து சென்ற ஸ்ரீலங்கா பொலிஸினரின் வாகன அணி மீது விடுதலைப் புலிகள் அதிரடித்தாக்குதலை அண்மையில் மேற்கொண்டனர்

(4-ம் பக்கம் பார்க்க)

# பூநகரி-சங்குப்பிட்டிப்பகுதியில் புலிகள் - இராணுவம் மோதல்!

## படையினரை முன்னேறவிடாது கடும் தாக்குதல்

(நமது நிருபர் தேவா)

பூநகரி - சங்குப்பிட்டி பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்றிரவு வரை கடும் மோதல்கள் நடைபெற்றன. விமானங்கள் மற்றும் பீரங்கித் தாக்குதலுடன் முன்னேற முயலும் படையினரை முன்னேற விடாது புலிகள் கடும் தாக்குதல்களை தொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை எதிர்த்து விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று நண்பகல் கௌதாரி முனை, வலைப்பாடு, நாச்சிக்குடா பகுதிகளிலுள்ள கடற்கரைப்பகுதிகளில் படகுகள் மூலம் இராணுவம் தரையிறக்கப்பட்டதாகவும், இதேநேரம் கல்முனைப் பகுதிகளிலும் ஹெலிகள் மூலம் இராணுவம் பெருமளவில் தரை இறக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இராணுவத்தினர் மேற்படி பகுதிகளில் தரை இறக்கப்படும் போது பாலைதீவுக்கு அப்பால் தரித்து நின்ற பல பீரங்கிப் படகுகளிலிருந்து குண்டுகள்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பலத்துடன் சமன் செய்துவிட்டோம் - ராணுவ அதிகாரி

(கொழும்பு)

வடமாகாணத்தின் புங்குடுதீவு, மண்டைதீவு, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளை இராணுவம் கைப்பற்றியதன் மூலம் வடபகுதியில் விடுதலைப் புலிகளின் பலத்தை தாம் சமன்செய்து விட்டோம் என்றும் இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா போன்ற பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு கடல், வான் தரைரீதியான தாக்குதல் தொடர்ந்து கொண்டிருப்பதாகவும் அவ் அதிகாரி தெரிவித்துள்ளார். (ச)

## அநுராவும் போட்டி

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியின் செயலாளர் பதவிக்கு திரு. அநுரா பண்டாரநாயக்காவும்போட்டியிடுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன (சி)

## சபாநாயகர் தலைமையை பகிஷ்கரிக்க எதிர்க் கட்சிகள் முடிவு

(கொழும்பு)

இலங்கை நாடாளுமன்றம் இன்று கூடும் போது, சபாநாயகர் எம். எச். முகமட் சபைக்கு தலைமை தாங்கினால் அதை பகிஷ்கரிப்பதென நான்கு முக்கிய எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன.

சுதந்திரக்கட்சி, மகாஜன எக்சத்பெரமுன, ஐக்கிய சோஷலிச முன்னணி, ஈ. பி. ஆர். எல். எப். ஆகிய நான்கு கட்சிகளும் நேற்று திருமதி

(4ம் பக்கம் பார்க்க)

## பச்சிலைப்பள்ளி உ. அ. அ. பிரிவில் ஒன்பது இடங்களில் மக்கள் நடமாடத் தடை

(கொழும்பு)

பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 9 பகுதிகள் மக்களின் நடமாட்டத்திற்கு நேற்று பிற்பகல் 2 மணியிலிருந்து தடைசெய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு

(4ம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தூதுவர் 'ஜா'விற்கு இலங்கை பதில் அறிக்கை

(கொழும்பு)

இந்திய வானொலி திருப்பி திரு. கருப்பசாமி வெளியேற்றப்பட்டது தொடர்பாக இலங்கை வெளிநாட்டு அமைச்சு, இந்திய தூதர் திரு. என். என். ஜாவிற்கு பதில் அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளது.

திரு. கருப்பசாமியின் வெளியேற்ற உத்தரவை ஆட்சேபித்து இந்திய தூதர் இலங்கை வெளிவிவகார அமைச்சிடம் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்திருந்தார்

(4 - ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் 'அவ்ரோ' பீப்பா குண்டு வீச்சு பல வீடுகள் பலத்த சேதம்

(யாழ்ப்பாணம்)

அவ்ரோ விமானத்திலிருந்து நேற்று யாழ் நகர்ப் பகுதியில் வீசப்பட்ட பீப்பாக்குண்டுத் தாக்குதலினால் பல வீடுகள் பலத்த சேதமடைந்தன

நேற்று அதிகாலை 5 மணிக்கும் பிற்பகல் 3-40 மணிக்கும், அதன்பின்னர் 5-35 மணிக்கும் அவ்ரோ விமானம் யாழ் நகர்ப்பகுதியை பலதடவை வட்டமிட்டு எட்டுக்குண்டுகளை வீசியது.

யாழ்ப்பாணம், பண்ணைப் பகுதியை அண்டிய கடல் கரைப் பகுதிகளிலும், முன்னைய தந்தி-தொலை தொடர்பு கட்டிடப் பகுதியின் பின்புறத்திலும், "அவ்ரோ" விமானம் ஐந்து பீப்பாக் குண்டுகளை வீசியது

நேற்று பிற்பகல் 3 மணியளவில் பண்ணைப் பகுதியில் 3 பீப்பாக்குண்டுகளையும், இரண்டாவது தடவையாக 3-30 மணியளவில் இரண்டு பீப்பாக்குண்டுகளையும் அவ்ரோ விமானம் மிக உயரத்திலிருந்து வீசியது.

இதேநேரம் நேற்று அதிகாலையிலும் அவ்ரோ விமானமொன்று கொட்டடிப் பகுதியில் உள்ள கடல் தொழிற்சாலைக்கு அருகாமையில் இப் பீப்பாக்குண்டுகளை வீசியதில் ஐந்து வீடுகள் பலத்த சேதத்துக்குள்ளாயின.

(3ம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பத்திரிகைகள் இலங்கை மீது கண்டனம்

(புதுடில்லி)

இலங்கை அரசின் நடவடிக்கை குறித்து இந்திய பத்திரிகைகள் பல கடும் கண்டனம் தெரிவித்துள்ளன

இந்திய செய்தியாளர் வெளியேற்றப்பட்டதற்கும், இந்திய

(4-ம் பக்கம் பார்க்க)

## எழுவைதீவு மக்கள் படையினரால் பணயம்

(யாழ்ப்பாணம்)

எழுவைதீவு பகுதியிலிருந்து பொதுமக்கள் எவரும் வெளியேற கடற்படையினர் தடை விதித்துள்ளனர். இத்தீவிக்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை பெருமளவில் வாங்குகிறோம், மில்க்வைற், யாழ்ப்பாணம். எ-1671

### சனி மாற்றம்

வாக்கியப் பஞ்சாங்கப்படி 28-10-91 சனிமாற்றம் (தனுசுவிலிருந்து மகரராசிக்கு மீண்டும் வக்கிரச்சனி மாற்றம்) விலை 7/- எங்கும் விற்பனையாகின்றது. சோபிதா புத்தகசாலை யாழ்ப்பாணம். (எழுதியவர் - சுந்தரேஸன்) (சி-5518)

---

## யாழ். மாவட்ட
## அரச ஓய்வூதியர் சங்கம்

27-10-91 ஞாயிறு நடக்கவிருந்த மேற்படி சங்கத்தின் விஷேட பொதுக் கூட்டம் (16-11-91) சனிக்கிழமைக்குப் பின்போடப் பட்டுள்ளது.

சி. மு. தியாகராசா
(கௌரவ செயலர்)

(சி-5522)

---

போராட்ட சூழலில்... உங்கள் உறவினர்களின் வெளிநாட்டு தபால்கள் காலதாமதமாக சென்றடைவதை

# DHL தபால் சேவை
# துரிதப்படுத்துகின்றது!!

பாதுகாப்பாகவும் உரிய இடத்தில் கிடைக்கவும் சகல வெளிநாட்டுத் தபால்களையும் எம்மிடம் ஒப்படையுங்கள்

# DHL International

C/o Cosmos,
Marketing Services,
120, K. K. S. Road, Jaffna.

(ஏ 1614)

---

உ

அமரர்
### ஸ்ரீமதி இரத்தினம்மா நடராசா
அவர்களின்

## ஆத்மசாந்தி வைபவமும்
## நன்றி நவிலலும்



அன்புடையீர்,

சென்ற 25-9-1991 அன்று சிவப்பேறடைந்த எம் குடும்பத் தலைவி ஸ்ரீமதி இரத்தினம்மா நடராசா அவர்களின் இறுதிவைபவத்தில் உறுதுணையாயிருந்து பல வழிகளிலும் உதவியோருக்கும் சமுகமளித்தோருக்கும் நன்றி கூறுவதுடன், 24-10-1991 அன்று மு. ப. 11 மணியளவில் அன்னாரின் சோதரியின் இருபாலை இல்லத்தில் நடைபெறவிருக்கும் சபிண்டீகரண வைபவத்திலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்களை வந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
ம. க. நடராசாவும் பிள்ளைகளும்

அவ்வண்ணமே வேண்டுபவர்கள்: (நீர்வேலி)
திருமதி இரத்தினமலர்
சண்முகராசாவும் குடும்பத்தினரும்.
இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

(ஏ-1672)

---

## 45-வது நினைவு நாளும்
## வீர வணக்கமும்



வீர வேங்கை திலீப்
(மார்க்கண்டு இளங்கீரன்)
(ஆவரங்கால், புத்தூர்)

வீர ஜனனம்:
25-05-72



2வது. லெப். நேசன்
(சிவநேசன் சிவசங்கர்)
(மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்)

வீர ஜனனம்:
24-01-77

வீர மரணம்: 09-09-91

மண்ணாற்றில் காவியமான
மருத்துவ வேங்கைகளே!
இன்று
உங்களது வீர மரணத்தின்
நாற்பத்தைந்தாவது நினைவு நாள்
நீங்கள்
வீரத்தின் ஒளிர்வாக
ஒளிர்ந்து கொண்டிருப்பதால்
நாமும்

உங்களுக்கு ஒளித்தீபம்
ஏற்றுகிறோம்
எண்ணெய் ஊற்றியல்ல
எமது கண்ணீரை வார்த்து
உங்களுக்கு அஞ்சலியாக
ஈழத்தின் வரைபடத்தை
வரைந்து கொண்டிருக்கிறோம்
கண்ணீரால் அல்ல
எமது இரத்தத்தால்.

— நண்பர்கள்.

(சி 5524)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### கப்டன் றேமன்
[இராமானுஜம் சீதாராம்]

வீரஜனனம்: 09-04-1968
வீரமரணம்: 23-10-1990

ஈழத்தில் இனியவன் பூத்திட்ட போதே சீதாராம்
இன்றவன் எங்களிடை! இல்லை
களப்புலியாகி களம்பல கண்டதால் கப்டன் றேமன்
களப்புலி இன்றவன் எம்மிடை! இல்லை
பாய்கின்ற புலியிவன் பலியானதோ! பலாலி
இவன் நினைவினில் தமிழ் வீரர் அணியினர் பலாலிக்கு
தடைவேலி
தமிழ் கவிகள் பாடுபவர் பலாலியில்
படையோடும் செய்தி
காவியமாய் ஒளிரும் உன்நாமம் தமிழீழத்தில்
இது உறுதி

அப்பா, அம்மா, தங்கை, தம்பி,
சின்னம்மா, மாமா, மாமி
ஆகியோர் மற்றும் நண்பர்கள்.

(சி-5510)

## உத்தரபிரதேச நிலநடுக்கம்

# 250 கிராமங்கள் பாதிப்பு 7,500 வீடுகள் முற்றாக சேதம்

## - 661 பேர் பலி -

(புதுடில்லி)

இந்தியாவின் உத்தரப்பிர தேசத்தில் இடம்பெற்ற நில நடுக்கத்தில் இதுவரை 661 பேர் பலியானதாயும் 1380 பேர் காயமடைந்ததாகவும் 250 கிராமங்கள் பலத்த பாதிப்பிற்குள்ளானதாகவும் 7,500 வீடுகள் சேதமுற்ற தாகவும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

நேற்று முன்தினம் இப் பகுதிகளில் முதல்கட்ட மதிப் பீட்டை மேற்கொண்ட உயர் மட்டக்குழு இந்த மதிப் பீட்டை வெளியிட்டுள்ளது.

இராணுவ ஹெலிகொப்டர் கள் பல தொடர்ந்தும் மீட் புப் பணியில் ஈடுபட்டு வரு கின்றன. உதவி நடவடிக்கை களும் தொடர்ந்தவண்ணம் முள்ளன. பல பகுதிகளிலும் வீதிகள் முற்றாக மறைந்து போனதால் நிவாரணப்பணி கள் பெருமளவு தாமத மடைந்துள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது.

பல பகுதிகளிலும் விமானங் களும், ஹெலிகொப்டர்களும் மருந்துப் பொருட்களையும், உணவுப் பொருட்களையும் போட்டு வருவதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (சி)

## பஞ்சாப்பில் 31 வங்கி கிளைகள் தீ வைத்து எரிக்கப்பட்டது

(புதுடில்லி)

பஞ்சாப்பில் 7 வங்கிகளுக்கு சொந்தமான 31 கிளை கள் நேற்று முன்தினமிரவு தீவைத்து எரிக்கப்பட்டது.

ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா, யூகோ பாங்க், பஞ்சாப்-சிந்து பாங்க், இந்தியன் ஓவசீஸ் பாங்க், பஞ்சாப் நாசனல் பாங்க், ஸ்ரேற் பாங்க் ஒவ் பட்டியாலா, கனரா பாங்க் ஆகிய வங்கிகளுக்கு சொந்த மான கிளைகளே தீவைக்கப் பட்டன.

தீவிரவாதிகளே இச்செயலை செய்ததாக தெரிவிக்கப்பட் டது.

## ஊனமுற்றோருக்கு சுயதொழில் பயிற்சி வகுப்பு நடத்த ஏற்பாடு

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உடல் ஊனமுற்றோருக்கு கான சுயதொழில் பயிற்சி வகுப்புக்களை நடத்த யாழ்ப் பாணம் ஊனமுற்றோர் சங்கம் முன்வந்துள்ளது.

உடல் ஊனம் உற்றவர்கள் தொழில் வாய்ப்புக்களை பெற் றுக்கொள்ளவும், தமது வாழ்க் கைக்கு தேவையான வருமா னத்தைப் பெற்றுக்கொள்ள வும் இப் பயிற்சி வகுப்புக்கள் வழிசெய்யும்.

கதிரைகள் பின்னுதல், துவிச்சக்கர வண்டிகள் திருத் துதல், அம்புத் தொழில், பனை, வாழைநார் ஆகியவற்றி லிருந்து பல்வேறு பொருட் களை உற்பத்தி செய்தல், பிரம் புத் தொழில் போன்ற பல் வேறு தொழில்களில் இவர் களுக்கு பயிற்சிகள் வழங்கப் பட உள்ளன.

பயிற்சிபெறும் தெரிவுசெய் யப்படும் உடல் ஊனமுற்றோர் களுக்கு பயிற்சிக்காலத்தின் போது தங்குமிட வசதி, ஊக்குவிப்புப்பணம் போன் றனவும் வழங்கப்பட உள்ளன.

பயிற்சி முடிவில் இவர்கள் சுயமாகவே ஒரு தொழிலில் ஈடுபட்டு வருமானத்தை பெற் றுக்கொள்ளவும் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இப்பயிற்சி நெறியில் சேர விரும்பும் உடல் ஊனமுற்றவர் கள் யாழ்ப்பாணம் ஊனமுற் றோர் சங்கப் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (109)

## இராசி பலன்

**23-10-1991**
**புதன்கிழமை**
**(தமிழுக்கு ஐப்பசி 06)**

பூரணை மாலை 5-30 வரை. ரேவதி காலை 7-34 வரை மரணயோகம். கரிநாள். இராகுகாலம் நண்பகல் 12-02 முதல் 1-32 வரை. சுபநேரம் மாலை 4-32 முதல் 6-07 வரை. பூரணைவிரதம்.

மேஷம்: பொருள் வரவு. புதிய முயற்சி, குடும்ப சிறப்பு.

இடபம்: அவசர முடிவு. மனக்கஷ்டம் வீண் பகை.

மிதுனம்: தொழில் முயற்சி, மனைவியால் புகழ், பயணம்.

கடகம்: வாக்கு வசீகரம். இனசன உறவுவெற்றி வாய்ப்பு

சிம்மம்: அதிகாரிகள் இணக்கம்: வேலைப்பழு, அலைச்சல்.

கன்னி: குடும்ப கவலை, வீண்தொல்லை, மனமுடை.

துலாம்: தொழில் லாபம், பணவரவு, புத்திரர் உதவி.

விருச்சிகம்: திருமணயோகம் சகோதர உதவி, பாராட்டு.

தனுசு: எதிரிகள் சூழ்ச்சி, தொழில் கஷ்டம், அசதி

மகரம்: பயணக்களைப்பு, காரியதடை, தாமதம்.

கும்பம்; புதியசிந்தனை, காரிய சித்தி, தொழில் முதலீடு.

மீனம்: குடும்ப பகை. வேண்டாத செலவு, பதட்டம்

ஜோஸ்யர்

## குவைத் விண்ணப்ப படிவங்கள் பரிசீலனை

(மானிப்பாய்)

யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட குவைத் விண்ணப்பப்படிவங் கள் புனர்வாழ்வு அமைச்சி னால் பரிசீலனை செய்யப்படுவ தாக தெரியவந்துள்ளது.

குவைத்திலிருந்து வேலை இழந்து வந்தவர்களினால் யாழ். செயலகத்தில் கையளிக் கப்பட்ட விண்ணப்பப்படிவங் களின் ஒரு தொகுதி அண் மையில் கொழும்புக்கு அனுப் பிவைக்கப்பட்டிருந்தது. இவற் றுக்கு நட்டஈடு வழங்குவது சம்பந்தமாக ஒவ்வொரு விண் ணப்பங்களும் தனித்தனியாக மிக நுணுக்கமான முறையில் பரிசீலனைசெய்யப்பட்டு வருவ தாக அங்கிருந்துவரும் செய்தி கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நட்டஈடு கோரி இதுவரை சுமார் 1500 பேர் யாழ் செயலகத்தில் தமது விண்ணப்பங்களை கையளித் துள்ளதாகவும் மேலும் தெரிய வந்துள்ளது. (71)

## இரங்கல் திருப்பலி

(ஊர்காவற்றுறை)

யாழ் — மன்னார் மறை மாவட்டங்களில் கடந்த 43 வருடங்களாக இறைப் பணியாற்றிய ஸ்பானிய நாட்டைச் சேர்ந்த அருட் திரு சொனிப்பான் கொன் சால்வெஸ் அடிகள் மற்றி நகில் இறைவனடி சேர்ந் ததையிட்டு அவரின் ஆத்ம சாந்திக்காக இன்று 23-ந் திகதி புதன்கிழமை மாலை யாழ். புனித மரியாள் பேரா லயத்தில் யாழ். ஆயர் கலா நிதி தியோகுப்பிள்ளை ஆண் டகை தலைமையில் இரங்கல் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவிருக்கிறது. (59)

## கைதிகளானாலும் மனிதாபிமானமாக நடத்தப்பட்டோம்

(யாழ்ப்பாணம்)

"எம்மை அறியாமல் நாம் தவறுகள் செய்துவிட்டோம். ஆனால் இன்று அவற்றை உணர்ந்து திருந்திவிட்டோம்"

நேற்றுமுன்தினம் கோண் டாவிலில் வைத்து புலிகளால் பெற்றோரிடம் ஒப்படைக்கப் பட்ட 42 பேரில் குருநகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மேற் கண்டவாறு பத்திரிகையாளர் களிடம் தெரிவித்தார்.

கொழும்பைச் சேர்ந்த ஒரு வர் கூறுகையில், "நாம் கைதி களாகப் பிடிபட்டாலும், மனிதாபிமானத்துடன் நடாத் தப்பட்டோம். அங்கிருந்த காலத்தில், நாம் சிறுசிறு வேலை கள் செய்தாலும், உற்றார், உறவினர்களை சந்திப்பதற்கும், எமக்குவேண்டிய உணவுகளை உண்பதற்கும், அனுமதிக்கப் பட்டோம்" என்றார். (வி)

## சிறுவர் இல்லம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மகளிர் பிரிவினர் நேற்று சண்டிலிப் பாயில் செஞ்சோலை சிறுவர் இல்லம் ஒன்றை பிற்பகல் 2 மணிக்கு திறந்து வைத்தனர்.

பெருந்தொகையான பொது மக்கள் கலந்து கொண்ட இவ் வைபவத்தில் விடுதலைப்புலி கள் மக்கள் முன்னணிப் பிர முகர்கள் உரை நிகழ்த்தியது டன் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (வி)

## கிளிநொச்சியில் 35 ஏக்கரில் பாற்பண்ணை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கிளி நொச்சி விவசாய பீடத்தில் அமைந்திருக்கும் விலங்கு வேளாண்மைத் துறையினர் விவசாயபீடத்தின் கால்நடை வளர்ச்சிக்கும், பால் பதனிடும் தொழில்நுட்பத்தை கிராமிய மட்டத்தில் மக்களுக்கு அறி முகப்படுத்தி அவர்களிடையே இத் தொழில்நுட்பத்தை அதி கரிக்கும் நோக்கத்தோடும், முதற்கட்டமாக 20 நல்ல இன பசுக்களைக் கொண்ட பாற்பண்ணை ஒன்றை அமைத் துள்ளார்கள்.

இப்பண்ணை 35 ஏக்கர் காணியில் அமைந்திருக்கிறது. இதில் 6 ஏக்கர் காணியில் கால்நடைத் தீவனத்திற்கென நல்ல இன புற்கள் வளர்க்கப் பட்டிருக்கின்றன.

இப் பண்ணையில் இருந்து பெறப்படும் பால் மற்றும் தயிர் போன்றவை விலங்கு வேளாண்மை துறையினரின் விற்பனை நிலையத்தில் கடாக பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டுவருகின்றது.

கிளிநொச்சி மாவட்ட கால் நடைத் தீவனத்தை அதிகரிக் கும் நோக்கத்தோடு அதன் பண்ணையில் வளரும் நல் லினப் புற்களின் தண்டுகளை கால்நடை வளர்ப்போர் தங் கள் காணிகளில் பயிரிடுவ தற்கு ஏற்றவகையில் இவர் களுக்கு இலவசமாக வழங்கப் படவிருக்கிறது. (153)

## மதுவரி திணைக்கள பரிசோதகர்களின் அரையாண்டுப் பரீட்சை

(கொழும்புத்துறை)

மதுவரித் திணைக்களத்தைச் சேர்ந்த பரிசோதகர்களுக் கான திணைக்களத்தின் எழுத்துமூலமான அரையாண் டுப்பரீட்சை இம்மாதம் 26-ந் திகதி கொழும்பில் உள்ள மதுவரி ஆணையாளர் அலு வலகத்தில் நடைபெறவு ளது.

எதிர்வரும் 26-ந் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு பரீட்சை ஆரம்ப மாகும், என்றும் இப்பரீட்சை யில் பங்குபற்றும் சகல மாவட்டங்களிலும் உள்ள மதுவரிப் பரிசோதகர்கள் குறித்த திகதியில் பரீட்சைக் குத் தோற்றுமாறு மேலதிக மதுவரி ஆணையாளர் திரு. டி. அமதூர் சுற்றுநிருபம் மூலம் சகல மாவட்டங்களிலு முள்ள மதுவரிக் கிளை அலு வலகங்களுக்கும் அறிவித்துள் ளார். [154]

## மேலதிக ரயில் சேவை

(கொழும்பு)

கொழும்புக்கும் வவுனியா வுக்குமிடையில் மேலதிக ரயில் சேவை கடந்த 15ம் திகதி முதல் நடைபெற்று வருவதா கத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு கோட்டையில் இருந்து காலை 7 மணிக்குப் புறப்படும் இந்த ரயில் பிற் பகல் 2-10க்கு வவுனியாவை வந்தடைகிறது. பின் பிற்பகல் 3 மணிக்கு வவுனியாவிலிருந்து புறப்படும். இந்த ரயில் 4 மணிக்கு அனுராதபுரம் வந் தடையும். பின் அங்கிருந்து பயணிகள் பஸ் மூலம் கொழும் புக்குச் செல்லமுடியும் என வும் தெரிவிக்கப்படுகின்றது. ஏற்கனவே காலை 8 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் என இரு ரயில்கள் கொழும்பு செல் வதும் தெரிந்ததே. [சி]

## சங்கானையில் மக்களுக்கு மண்ணெண்ணை வழங்கப்படவில்லை

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட மக்க ளுக்கு சங்கானை ப. நோ. கூ. சங்கத்தினால் இதுவரை மண் ணெண்ணை வழங்கப்படவில்லை.

அண்மையில் பண்டத்தரிப்பு தெல்லிப்பழை, காரைநகர் ப. நோ. கூ. சங்கங்கள் மக்க ளுக்கு பங்கீட்டு அட்டைக்கு மண்ணெண்ணை விநியோகித் தனர்.

ஆனால் இதுவரை சங்கானை ப. நோ. கூ. சங்கத்தினர் மக் களுக்கு மண்ணெண்ணை பங் கீட்டு அட்டைக்கு குறிப்பிட்ட அளவுகூட விநியோகிக்கப்பட வில்லை என்று கூறப்படுகிறது.

சங்கானை ப. நோ. கூ. சங்க பணியாளர்கள் ஒவ்வொரு வருக்கும் இரண்டு லீற்றர் மண்ணெண்ணை விநியோகித் தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (137)

## யாழ். நகரில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குருநகர், கோட்டை, கொட் டடிப் பகுதியில் குண்டுகள் பலத்த சேதத்துடன் வெடித் ததைத் தொடர்ந்து மக்கள் பாதுகாப்பு தேடி ஓடினார் கள்.

நேற்று அதிகாலை 5 மணி யளவில் பாஷையூருக்கு அப் பால் உள்ள 'கல்முனை' மண் ணித்தலை, பள்ளிக்குடா பகுதி களை நோக்கி பலத்த பீரங் கித் தாக்குதல்களை கடற் படையினர் மேற்கொண் டனர்.

பாலைதீவு கடல் பிராந் தியத்தில் தரித்து நின்ற இரு கடற்படை பீரங்கிக் கப்பல் களிலிருந்து சரமாரியாக மேற் படி பகுதிகளை நோக்கி குண்டு கள் ஏவப்பட்டன. இதே நேரம் மண்டைதீவுப் பகுதி யில் நிலைகொண்டுள்ள இரா ணுவமும் கல்முனைப் பகுதியை நோக்கி அடுத்தடுத்து பல ஷெல் குண்டுகளை ஏவியவண் ணம் இருந்தது.

இத்தாக்குதல்கள் நடை பெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் இரு அவ்ரோ, இரு ஹெலி ஒரு சீப்பிளேன் ஆகி யன வானத்தில் வட்டமிட்ட வண்ணம் இருந்தன. ஹெலி யிலிருந்து துப்பாக்கி வேட்டு கள் தீர்க்கப்பட்டன.

இதே நேரம் மண்டைதீவு பகுதிகளிலிருந்து இராணு வத்தினரால் ஏவப்பட்ட பல ஷெல் குண்டுகள், குருநகர், யாழ். கோட்டைப் பகுதிகளி லும் விழுந்து வெடித்தன. அவ்ரோ விமானத்திலிருந்து போடப்பட்ட இரு பீப்பாய் குண்டுகள் கொட்டடிப் பகுதி களில் பொதுமக்களின் வீடு களின் மேல் விழுந்து வெடித்த தில் மூன்று வீடுகள் தரைமட் டமாகின. மேலும் மூன்று வீடு கள் பலத்த சேதமடைந்தன.

### பொம்மர் தாக்குதல்

நேற்று அதிகாலை 4-30 மணியளவில் இரு பொம்மர் விமானங்கள் சேரதீவு, சென் தாரிமுனை ஆகிய பகுதிகளில் அடுத்தடுத்து குண்டுகளை வீசி தாக்குதல்களை நடத்தின. இதனால் சேரதீவு இறங்கு துறையில் தரித்து நின்ற ஆயி ரக்கணக்கான பயணிகளும், சைக்கிள் வியாபாரிகளும் நாலா பக்கமும் சிதறி ஓடி னார்கள். பலர் தற்பாதுகாப் புக்கு கடலுக்குள் குதித்த னர்.

அதிகாலையில் இத்தாக்கு தல்கள் நடத்தப்பட்டதினால் பீரங்கிப் படகுகளில் இருந்து ஏவப்பட்ட குண்டுகளும், மண்டைதீவிலிருந்து ஏவப் பட்ட ஷெல் குண்டுகளும் தீப் பந்தம்போல் வானத்தில் பறந்து வந்து கல்முனைப் பகுதியில் விழுந்து வெடித் ததை பாஷையூர் பகுதியில் நின்ற பொதுமக்கள் காணக் கூடியதாகவும் இருந்தது. (வி)

((56)

# வடக்கு - கிழக்கு பகுதியில்

## 4179 ஆசிரியர் பதவி வெற்றிடம்

(திருமலை)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் 4179 ஆசிரியர் பதவிகள் வெற்றிடம் இருப்பதாக வடக்கு கிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சின் செயலாளர் கொழும்பிலுள்ள கொள்கை திட்டமிடல் அமைச்சுக்கு அறிவித்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

தமிழ் மொழி மூல ஆசிரியர் பதவி வெற்றிடங்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் 474ம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 1069ம், கல்முனை கல்வி மாவட்டத்தில் 798ம், திருகோணமலை மாவட்டத்தில் 726ம், வவுனியா மாவட்டத்தில் 526வெற்றிடங்கள் இருப்பதாக கூறப்படுகிறது.

திருமலை, அம்பாறை மாவட்டங்களில் சிங்கள மொழிமூல ஆசிரியர் பதவிகள் வெற்றிடங்கள் 201, 381 இருப்பதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [153]

### இந்தியத் தூதர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே கருப்பசாமி வெளியேற்றப்பட்டதற்கான காரணங்களை விளக்கி இந்த அறிக்கை இந்தியத் தூதரகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் விபரம் வருமாறு; இந்திய அரசுக்குச் சொந்தமான அகில இந்திய வானொலி மூலமும், தூரதர்ஷன் மூலமும் வெளியிடப்பட்ட சபாநாயகர் ராஜினாமா என்ற இச்செய்தி இரு நாடுகளுக்குமிடையிலான நல்லுறவைப் பாதிக்கக்கூடிய தொரு நிலைப்பாட்டைக் கொண்டதாக அரசு கருதுகிறது.

அண்மைக் காலத்தில் இந்தியப் பத்திரிகைத் துறையின் சில பிரிவுகள் ஜனாதிபதியைப் பதவியிலிருந்து நீக்க கொண்டு வரப்பட்ட குற்றப் பிரேரணை மீதான அரசியல் சாப்பு பிணக்குக் குறித்துத் திரித்துக் கூறப்பட்ட செய்திகளையும் உண்மைக்குப் புறம்பானவைகளையும் வெளியிட்டு இந்த முயற்சிகளுக்கு சார்புடையதாய் இருக்கின்றார்கள் என்ற எண்ணங்களை ஏற்படுத்தியிருந்தன.

அத்துடன் கொழும்பில் 6வது சார்க் உச்சி மாநாட்டினை நடாத்தும் இலங்கையின் இறைமையில் சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் அண்மைக் காலத்தில் இந்தியப் பத்திரிகைகள் பொறுப்பற்ற முறையில் விஷமத்தனமான செய்திகள் பலவற்றை வெளியிட்டிருந்தன.

திரு. கருப்பசாமி குடிவரவு அதிகாரிகளினால் விசாரணை செய்யப்படும்போது இந்தியத் தூதரகத்தின் இரண்டாவது செயலர் திரு. ஷெல் சமூகமளித்திருந்ததுடன் திரு. கருப்பசாமி இந்திய தூதரக ஊழியர் என்ற வகையில் எந்தவொரு அறிக்கையிலும் கைச்சாத்திட வேண்டிய அவசியமில்லை என்று கூறியிருந்தார் என்றும் அதில் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் பொய்யான தகவல் இலங்கை குடிவரவு அதிகாரிகளை தவறான வழியில் இட்டுச் செல்வதற்கு வேண்டுமென்றே எடுக்கப்பட்ட முயற்சியாகுமென்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

திரு. கருப்பசாமியால் அனுப்பிவைக்கப்பட்ட செய்தி அறிக்கை பொறுப்பற்றவிதத்தில் எழுதப்பட்டதாகவும் விபரிக்கப்பட்டுள்ளது. பத்திரிகையாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் ஒழுக்கக் கோவையை மீறியதாகவே இதனைக் கருதமுடியும். சபாநாயகர் தொடர்பாக முற்றிலும் ஆதாரமற்ற ஒரு செய்தியை வெளியிட்டு சபாநாயகருக்கும் ஜனாதிபதிக்கும் மாசு ஏற்படுத்தும் வகையில் இச்செய்தி பொறுப்பற்ற விதத்தில் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே திரு. கருப்பசாமிக்கு வழங்கப்பட்ட விசாவை ரத்துச்செய்வதைத்தவிர இலங்கை அரசுக்கு வேறுவழிகளிருக்கவில்லை. இதன்மூலம் ஒரு பொறுப்புள்ள நிருபர் அவரின் இடத்திற்கு இங்கு அனுப்பிவைக்க ஏதுவாயிருக்குமென்றும் இக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்படுள்ளது. [சி]

### சபாநாயகர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் கொழும்பில் கூடியபோது மேற்படி முடிவை எடுத்துள்ளனர்.

இதேநேரம் சபாநாயகர் தலைமைதாங்கும் நாடாளுமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டங்களையும் பகிஷ்கரிப்பதென்றும் மேறபடி கூட்டங்களில் தாங்கள் இல்லாமல் எடுக்கப்படும் எந்த ஒரு தீர்மானங்களையும் அனுசரித்து நடப்பதில்லையென்றும் இவர்கள் முடிவு செய்துள்ளனர்.

### பச்சிலைப்பள்ளி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சின் நடவடிக்கைத் தலைமை அலுவலகம் அறிவித்தது.

சங்கத்தார்வயல், புலோவெளி, புதுமடம். நித்தியாவட்டை, கட்டைக்காடு, முள்ளியான். பெரியபச்சிலைப்பளை, பொட்டாண்டுகுளம், இயக்கச்சி ஆகிய இடங்களே மக்களின் நடமாட்டத்திற்குத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்த இடங்களில் நிலக்கண்ணி வெடிகள் வைக்கப்பட்டுள்ளதாக படையினர் பொது மக்களுக்கு எச்சரித்துள்ளனர்.

மறு அறிவித்தல்வரை இந்த இடங்கள் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### எழுவைதீவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

300 க்கும் மேற்பட்ட பொது மக்கள் படையினரால் பணயம் வைக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வந்த மூவர் நேற்றுத் தெரிவித்தார்கள்.

எழுவைதீவுப்பகுதியில் இராணுவத்திடம் சிக்கிய நிறைமாதக்கர்ப்பிணி ஒருவரும் அவரது பெற்றோரும் படையினரின் கடற்படை படகு மூலம் காங்கேசன்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கிருந்து செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இவர்கள் யாழ்ப்பாணம் அழைத்துவரப்பட்டனர்.

எழுவைதீவுப்பகுதியில் கடற்படையினரிடம் சிக்கியுள்ள பொதுமக்கள் உணவு மருந்து வசதிகளின்றி கஷ்டப்பட்டு வருவதாகவும் அவர்கள் கூறினார்கள்.

வீடுகளைவிட்டு வெளியேற முடியாதவாறு பொதுமக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் பல கஷ்டங்களை மேலும் எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவித்தனர்.

அத்தீவுமக்கள் பட்டினியை எதிர்நோக்கியிருப்பதாகவும், பல வயோதிபர்கள், குழந்தைகள் நோய்வாய்ப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

எழுவைதீவுப் பகுதியில் சுமார் பிரத்திற்கு மேற்பட்ட கடற்படையினர் சுற்றிவர தங்கியிருப்பதாகவும் பல வீடுகளில் கடற்படையினர் தங்கியிருப்பதாகவும் தெரிவித்தனர். [56]

### ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தில் இன்று புதன் கிழமை 2மணிக்கு அங்குராப்பணம் செய்யவிருக்கும் கல்வி அபிவிருத்திக் கழகக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பின்போடப்பட்டுள்ளதென்பதாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

### வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

திவகப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினருடனான மோதலில் வட்டுக்கோட்டையை சேர்ந்த சந்தையா பஞ்சலிங்கம் (பேபி) மற்றும் கிளிநொச்சி யில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வவுனியாவைச் சேர்ந்த மகாலிங்கம் யசோதரன் ஆகிய போராளிகள் வீரமரணமடைந்தனர்.

வீர மரணம் அடைந்த போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர். (க)

### பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

திவகப்பகுதியிலிருந்து இடம் பெற்ற இராணுவநடவடிக்கை காரணமாக காலபோகச் செய்கையினைப் புரிந்துவந்த விவசாயிகள் நெற் செய்கையினை மேற்கொள்ளமுடியாத நிலையில் உள்ளனர்.

காலபோகத்திற்குரிய நெற்பயிர்ச் செய்கையினை மேற்கொண்டுவந்த விவசாயிகள் அதிகளவாக வெளியேறிவிட்டனர். [50]

### யாழ்ப்பாணம்

1-ம் பக்கத் தொடர்ச்சி]

மேற்படிப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள பதற்றநிலை காரணமாக நேற்று, முத்திரைச் சந்தைக்கு கொழும்பு செல்வதற்காக வந்த பல பொது மக்கள் திரும்பிச் சென்றனர். [வி]

### இந்தியப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகைகள் மீது இலங்கை அரசு குற்றம்சாட்டியுள்ளதற்குமே மேற்படி பத்திரிகைகள் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளன.

மேலும் இலங்கை அரசின் போக்கைகண்டித்ததுடன் பிரிட்டிஷ் தூதர் வெளியேற்றப்பட்டது குறித்தும் இவை மீண்டும் குறிப்பிட்டுள்ளன. [சி]

### பூநகரி - சங்குப்பிட்டி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சரமாரியாகத் தீர்க்கப்பட்டதுடன், அவ்ரோ, சி-பிளேன் ஹெலி, பொம்பர் விமானங்களும் இராணுவத்தினருக்கு உதவியாக குண்டுகளை வீசியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தரை இறங்கிய இராணுவத்தினர் தம்முடன் பாரிய வாகனங்களையும் கொண்டுவந்துள்ளதாகவும், கௌதாரிமுனையில் தரையிறங்கிய இராணுவத்தினர் அப்பகுதிகளிலுள்ள வீடுகளையும், கடைகளையும் தீவைத்து எரித்ததுடன், பல பொதுமக்களையும் கைதுசெய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதே நேரம் இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகளை விடுதலைப்புலிகள் சுற்றிவளைத்துத் தாக்குதல் மேற்கொண்டு வருவதாக கடைசிச்செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

# வவுனியாசென்றலொறிகள் இடைவழியில் திரும்பின

(யாழ்ப்பாணம்)

வவுனியா நோக்கிச்சென்ற பல லொறிகள் நேற்று கொண்டுசென்ற பொருட்களுடன் யாழ்ப்பாணம் நோக்கித் திரும்பிவந்தன.

நேற்றுக்காலை சங்குப்பிட்டி, கேரதீவுப் பகுதியில் மேற்கொண்ட தாக்குதல்களைத் தொடர்ந்தே லொறிகள் திரும்பிவந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [56]

## 24 சிறைச்சாலைகளில்

# தமிழ் அகதி முகாம்

(சென்னை)

தமிழகத்தில் 24 சிறைச்சாலைகள் அகதி முகாம்களாக மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தமிழ் அகதிகள் இச்சிறைச்சாலைகளிலேயே அகதிகளாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பதிவு செய்யாத தமிழ் அகதிகள் உள்ள அகதி முகாம்களிற்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (சி)

### 200 தமிழ் கைதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற சந்தேகத்தின்பேரில் சிறை வைக்கப்பட்டதாகக் கூறப்படும் 200 தமிழ் கைதிகளை எந்தவித விசாரணையும் இன்றி கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக இவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்?

குற்றப்பத்திரிகை தாக்கலோ அல்லது விசாரணைகளோ இன்றி கடந்த ஒரு வருடமாக தாம் தடுத்துவைக்கப்பட்டுள்ளதனைக் கண்டித்தே இவர்கள் உண்ணாவிரதப் போரை ஆரம்பித்துள்ளனர்.

அவசரகாலச் சட்டம் அமுலில் உள்ளதால் இவர்களை விசாரணை எதுவுமின்றி நீண்ட நாட்களுக்கு தடுத்து வைத்திருக்க முடியும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கைதிகளில் பலர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களென்று தெரிவிக்கப்படுகிறது.

உண்ணாவிரதப் போரில் குதித்துள்ளவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவிற்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. [க]

### பொலிஸ்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் தாக்குதலில் பொலிசாருக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மோதலில் மட்டக்களப்பு இருதயபுரத்தை சேர்ந்த தங்கையா ஜெயக்குமார், மட்டக்களப்பு கல்லடியை சேர்ந்த அன்ரனி சந்திரகுமார் ஆகிய போராளிகள் வீரமரணமடைந்தனர்.

வீரமரணமடைந்தபோராளிகளுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (க)

## இந்தியா மீண்டும் வெற்றி

(ஷார்ஜா)

ஷார்ஜாவில் நடைபெற்று வரும் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், நேற்றைய ஆட்டத்தில் இந்தியக் கோஷ்டியிடம், மே. இந்தியக் கோஷ்டி மீண்டும் தோல்வியடைந்தது.

நேற்றைய ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மே. இந்தியக் கோஷ்டி 46 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 145 ஓட்டங்களைப் பெற்றது. இந்தியக் கோஷ்டி 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 147 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்படி இருகோஷ்டிகளுக்குமிடையில் நடந்த வாரம் நடை பெற்றமுதல் ஆட்டத்திலும் இந்தியா வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

## அதிபர், ஆசிரியருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களையும், ஆசிரியர்களையும் கொத்தணிப் பிரிவு அடிப்படையில் இன்று புதன்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நல்லூர், கொக்குவில், கொண்டாவில், வண்ணார்பண்ணை வடக்கு கொத்தணியில் கடமை புரிபவர்களையும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில், குருநகர், யாழ்நகர், வண்ணார்பண்ணை தெற்கு, வண்ணார்பண்ணை மேற்குக் கொத்தணியில் கடமை புரிபவர்களையும் தவறாது வருகை தருமாறு கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வேண்டியுள்ளார்.

## மரண அறிவித்தல்

### திருமதி வாலாம்பிகை மகேஸ்வரன்

சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி வாலாம்பிகை மகேஸ்வரன் காலமானார். இவர் காலஞ்சென்ற அம்பலவாணர் மகேஸ்வரன் (ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவியும், விஜயதேவி, சந்திரா (விவசாயத் திணைக்களம், சுளிபுரம்), சரோஜா (ஜேர்மனி), வனஜா (ஜேர்மனி) ஆகியோரின் அருமைத்தாயாரும், காலஞ்சென்ற கந்தசாமி, எட்வின் ஞானேந்திரகுமார் (மக்கள் வங்கி, சுன்னாகம்), காலஞ்சென்ற செல்வநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அருமை மாமியும், பிரசாந்தன் (சென் ஜோன்ஸ் கல்லூரி), ஈதரின் காயத்திரி (உடுவில்மகளிர் கல்லூரி), ஐவின் ஞானசாந்தி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஷெறின் டிலானி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), கிறிஸ்டி கிறிசாந்தி, நவநீதன் (ஜேர்மனி), வேதிகா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேத்தியுமாவார். இவரின் இறுதிக்கிரியைகள் 22-10-91 அன்று நடைபெற்றது.

தகவல்:
M. சேயோன்.

(இ-5521)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஒக்ரோபர் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under licence Number B/169588/91